DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT JUDGE, ERODE.
**O.S.No.** 51/2017

Deposition of Witness : DW. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வகுமார் | த/பெ. | : | இராமசாமி |
| கிராமம் | : | பாலமேட்டுபுதூர் | தாலுகா | : | கொடுமுடி |
| தொழில் | : | விவசாயம் | வயது | : | 67 |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 10-10-2025.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி (சாட்சி வழக்கறிஞரால் அடையாளம் காட்டப்பட்டார்)

இன்றைய தேதிவரை வாடகை கொடுக்கவில்லை என்று வாதிக்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. சொத்து எனக்கு தான் சொந்தம் என்று விளம்புகை பரிகாரம் கோரி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு சொத்து கிரையமேயாகிவிட்டதால் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யவில்லை. சொத்தின் சுவாதீனம் கேட்டு நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு சொத்தை கிரையம் கொடுத்து சுவாதீனம் கொடுத்ததால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிட்டது எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுத்தபின்னிட்டு தான் நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிடுவதற்கு தாவா சொத்திற்கு வந்தார் என்றால் அது தெரியவில்லை. 2ம் பிரதிவாதியின் வழக்கறிஞரும் நீதிமன்ற ஆணையருடன் தாவா சொத்தை பார்வையிடுவதற்கு வந்தார் என்றால் அது பற்றி தெரியவில்லை. சொத்தின் மதிப்பை கண்டறிவதற்காக தகுதி பெற்ற வேல்யூவர் பொறியாளர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தவற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் அவர் எனது சொத்தை பார்வையிட வேண்டியதில்லை. சிவகிரி சக்தி பைனாஸில் நான் பங்குதாரர் இல்லை என்பதை அறிவதற்கு பதிவாளரிடமிருந்து ஆவணங்களை வரவழைக்க எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. வாதிகளுக்கு தாவா சொத்தை தவிர வேறு குடியிருப்பு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 3வது வாதி மாதேஷ்வரியின் வங்கி பாஸ் புத்தகம் என்றால் சரிதான். அந்த அசல் வங்கி பாஸ் புத்தகம் **வா.சா.ஆ.44** ஆகும்.

என்னிடம் காட்டப்படும் பாஸ் புத்தகமானது மாதேஷ்வரியின் வீட்டு உபயோக சிலின்டர் பாஸ் புத்தகம் என்றால் அது தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது மாதேஷ்வரியின் அசல் வாக்காளர் அடையாள அட்டை என்றால் சரிதான். அந்த அசல் வாக்காளர் அடையாள அட்டை **வா.சா.ஆ.45** ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 1வது வாதி மணியின் குடும்ப அட்டை என்றால் சரிதான். அந்த குடும்ப அட்டை **வா.சா.ஆ.46** ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 2வது வாதி முருகேசனின் குடும்ப அட்டை என்றால் சரிதான். அந்த குடும்ப அட்டை **வா.சா.ஆ.47** ஆகும். வாதிகளின் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவைகளில் தாவா சொத்தின் முகவரி தான் உள்ளது என்றால் அவர்கள் வாடகைக்கு இருப்பதால் தாவா சொத்தின் முகவரி உள்ளது. 1ம் வாதி தாவா சொத்தை கிரையம் பெற்று அதில் கட்டிடங்கள் கட்டி அது முதல் இன்றைய தேதிவரை வாதிகள் தான் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் 1ம் வாதி மணி தான் முதலில் தாவா சொத்தை கிரையம் வாங்கினார். 1ம் வாதி மணி தான் தாவா சொத்தில் கட்டிடம் கட்டினார். 1ம் வாதி மணியிடம் இருந்து தான் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன். வாடகை கொடுக்கிறேன் என்பதால் வாதிகளை தாவா சொத்தில் குடியிருக்க அனுமதித்தேன். 2015ல் வாடகை கொடுப்பதாக வாதிகள் சொன்னார்கள். 6 மாதங்கள் வாதிகள் தரப்பில் வாடகை கொடுத்தார்கள், அதன்பிறகு வாடகை கொடுக்கவில்லை. வாடகை கொடுத்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் அதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை. தாவா சொத்து 2 அயிட்டங்கள் ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 13 – 1/2 சென்ட் ஆகும். காலி செய்யச்சொல்லி நான் மிரட்டியதால் வாதிகள் தரப்பில் என் மீது கொடுமுடி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு நான் விசாரணைக்கு சென்றேன் என்றால் தவறு. கிரையம் வாங்கிய பிறகு வாதிகள் காலி செய்து தரவில்லை என்று சொல்லி நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வாதிகள் சொத்தை விற்கவில்லை என்றும், கடனுக்காக தான் சொத்தை எழுதிக்கொடுத்தோம் என்றும் போலீஸ் விசாரணையில் சொன்னார்கள் என்றால் இல்லை. நான் கொடுத்த புகாரில் நீதிமன்றத்தில் சென்று பார்த்துக்கொள்ளுமாறு காவல் நிலையத்தில் சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான். 1ம்

வாதி படிப்பறிவு இல்லாத நபர் என்றால் தவறு. நானும் 3ம் வகுப்பு படித்துள்ளேன். 1ம் வாதி மணியும் 3ம் வகுப்பு படித்துள்ளார். நான் தாவா சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லும் சமயத்தில் அதன் மதிப்பு ரூ.60,00,000/-க்கு மேல் இருந்தது என்றால் நான் வில்லங்கம் போட்டு பார்த்து அதனுடைய மதிப்பிற்கு தான் நான் கிரையம் பெற்றேன். வில்லங்கம் போட்டு பார்ப்பது என்பது அரசு மதிப்பீடா என்றால் இல்லை. சொத்தில் வில்லங்கம் ஏதாவது உள்ளதா என்று வில்லங்கம் போட்டு பார்த்துவிட்டு சொத்தின் மதிப்பிற்கு கிரையம் பெற்றேன். பதிவாளர் அலுவலகத்தில் மதிப்பீடு பார்த்து பத்திரம் எழுதினேன். சொத்தை விற்கும் எண்ணத்தில் வாதிகள் எனக்கு ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் தவறு. நான் நல்ல எண்ண கிரையதாரர் இல்லை என்றால் தவறு. எனது ஆவணம் நடைமுறைக்கு வராத செல்லாத ஆவணம் என்றால் தவறு. பல நபர்களிடம் கடன் வாங்கி அதறக்கா பல ஆவணங்கள் ஏற்பட்டு அந்த கடன்கள் எல்லாம் வாதிகளால் தீர்க்கப்பட்டது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். ஆனால் நான் சொத்தை வாங்கும் போது எந்த வில்லங்கமும் இல்லை. கனகசுந்தரம் மற்றும் லோகநாதன் ஆகியோர்களை எனக்கு தெரியாது. குடும்ப சூழ்நிலை காரணமாக 2ம் வாதிக்கு பணத்தேவை ஏற்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் 2ம் வாதிக்கு பணத்தேவை ஏற்பட்டது என்றால் அவர் அவ்வாறு என்னிடம் சொல்லவில்லை. நான் சொல்வது போல் ஒருபோதும் வாதிகள் தாவா சொத்தில் வாடகைக்கு இருப்பது குறித்து என்னுடன் எந்த பேச்சுவார்த்தையும், ஒப்பந்தமும் ஏற்பட்டுத்தவில்லை என்றும் சொன்னால் தவறு. தாவா சொத்தில் ஒருபோதும் வாதிகள் வாடகைதாரர்கள் என்ற நிலையில் இருக்கவில்லை என்றும், வாதிகள் உரிமையாளர்கள் என்ற நிலையில் தாவா சொத்தில் இருந்து வருகிறார்கள் என்றும் சொன்னால் தவறு. என்னால் சொல்லப்படும் கிரையங்கள் அனைத்தும் செல்லாதவைகள் என்றும், அந்த கிரையங்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டியவைகள் என்றும் சொன்னால் தவறு. நான் வாதிகளை தாவா சொத்தில் இருந்து கட்டாயப்படுத்தி வெளியேற்ற முயற்சி செய்தேன் என்றால் தவறு. நான் கொடுமுடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். பிராதில்

வாதிகள் கோரியுள்ளவாறு பரிகாரங்கள் கிடைக்கதக்கது என்றால் தவறு. கடனுக்காக கிடைத்த ஆவணங்களை வைத்து தாவா சொத்தை சட்ட விரோதமாக அடைவதற்கு பொய்யாக கட்சி செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு .

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

II Addl. District Judge, Erode.